INCHCAPE
SHIPPING SERVICES

# வணிக விதிமுறைகள் மற்றும் நன்னடத்தை விதிகள்

இஞ்ச்கேப் உத்தரவாதம்



# தலைமை நிர்வாக அதிகாரியின் செய்தி

கடல்சார் சேவைகளை வழங்கும் பெரு நிறுவனமான, உலகளாவிய சொந்தமான முகவர் அமைப்பை உடைய இஞ்ச்கேப் தனித்துவத்துடனும் செயல்பட்டு சரியான நேரத்தில் நன்மை பயக்கக்கூடிய மாறுதலை செய்யும். உலகளவில் தங்கள் பணியாளர்களுடன் இணைந்து பங்குதாரர்கள், நுகர்வோர் உள்ளூர் நிலவரத்திற்கு உட்பட்டு எந்த வித மாறுதலையும் கொண்டு வரும்.

எங்களின் முதன்மையான குறிக்கோளானது உறுதியுடனும் இணக்கம் மற்றும் நெறிமுறைக்கு உட்பட்டு சரியான வழியில் தொழில் செய்வதே. நாங்கள் எப்பொழுதும் சிறிய அளவுகோலை விரும்புவதில்லை. ஆனால் சிறிய நடைமுறையுடன் கூடிய மாற்றங்களை செய்வோம்.

இந்த குறிக்கோள் முழுமையாக எங்கள் நிறுவனத்தின் எல்லா நிலையிலும் நடக்கும். இஞ்ச்கேப் நிறுவனத்தின் ஒவ்வொரு ஊழியரும் எங்களின் அர்ப்பணிப்பை பகிர்ந்துக் கொண்டு, பொறுப்புகளை தெரிந்துக்கொண்டு தேவையான உபகரணங்கள், பயிற்சி, பணிச்சூழல் அறிந்து நடக்க வேண்டும்.

வணிக நடைமுறையின் விதிகள் மற்றும் நெறிமுறைக்கு உட்பட்டு இணக்கத்தின் மையக்கருவை புரிந்துக்கொண்டு கப்பலுக்கு கலங்கரை விளக்குகள் வழிகாட்டியாக உள்ளது போல் ஒத்துழைக்க வேண்டும்.

எந்த நிறுவனமாக இருந்தாலும் வாழ்வின் எந்த இடமாக இருந்தாலும் ஒரு கப்பல் சேவை நிறுவனம் ஏகப்பட்ட ஊழல், இலஞ்சம் மற்றும் கட்டண வசதிகளை சந்திக்க நேரிடுகிறது. இஞ்ச்கேப் ஷிப்பிங் நிறுவனம் ஊழல் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகளை தொடர்ந்து எதிர்த்து போராடும்.

நிறுவனத்தின் மூலம் பரந்த அர்ப்பணிப்புடன் நாங்கள் வைத்துள்ள பெட்டியில் தனிப்பட்ட தகவலையும் அறிக்கைகளையும் தரலாம். போர் வேகத்தில் இணக்கம் அல்லது நெறிமுறைக்கு அப்பாற்பட்ட செயலுக்கு நடவடிக்கை எடுக்கப்படும். இரகசியம் காக்கப்பட்டு பின்விளைவு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கிறோம்.

இஞ்ச்கேப் நிறுவனம் பங்குதாரர்கள் மற்றும் நுகர்வோரிடம் முனைப்போடு செயல்படும். இணக்க நெறிமுறைகளை நிலை நிறுத்தும் முயற்சிக்கு ஆதரவளிக்கும். புதுமையும் ஊக்குவிக்கும். நிறுவனத்தை முன்னேற்ற தொடர்ந்து வழி நடத்துபவர்களை ஊக்குவிக்கும். நடத்தை விதிமுறைகள் மற்றும் நெறிமுறைகள் வாயிலாக நேர்மையான முறையில் அங்கீகரிக்கப்பட்டு நிலைத்தன்மையுடன் இருக்கும் உத்தரவாதத்தை நாங்கள் அளிக்கிறோம்.

கீழ் உள்ள ஆவணங்கள் எங்கள் நிறுவனத்தை தொடர்பு கொள்ள மட்டுமல்லாது நாங்கள் யார் மற்றும் எங்கள் பணியாளர்களைக் குறித்தும் அறிய உதவும்.

என் தொழில்சார்ந்த வேலை நேரம் முழுதும் இந்த கப்பல் துறையில் செலவிட்டுள்ளேன். நிறுவனம் மற்றும் தொழில் நிறுவனத்தின் தனிப்பட்ட முறையில் என்னை இணைத்துக்கொண்டு இணக்கம் மற்றும் நெறிமுறைக்கு உட்பட்டு நேர்மையான வழியில் நடந்துள்ளேன்.

**Frank Olsen**

# உள்ளடக்கம்




6 மதிப்புகள்

8 நெறிமுறைகள் பற்றிய தொகுப்பு

10 உரிமைக்குரல்

12 இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு

14 நுகர்வோர்

16 ஊழியர்கள்

20 மூன்றாம் நபரின் குறுக்கீடுகள்

22 நீடிப்புத்திறன்

24 தெளிவான கொள்கைகள்

26 தகவல் தொடர்புகள்



# இஞ்ச்கேப் மதிப்புகள்

## நிபுணத்துவம், உலகளாவிய தலைமைத்துவம், எதிர்கால நோக்கு

இஞ்ச்கேப் 170 வருட பாரம்பரியத்துடன் உலகளாவிய வரையில் இவ்வணிகத்தை நடத்தி வருகிறது. இந்தப் பாரம்பரியத்தை பயன்படுத்தி வருங்கால தேவையறிந்து செயல்படும். நுகர்வோர் நம்பிக்கையுடன் நிறுவனத்திடம் கொடுத்த வேலையை நெறிமுறைக்கு உட்பட்டு நிலைத்தன்மையுடனும் பணியை முடிக்கும்.

## உலகளாவிய முன்னோக்கு பார்வை, மக்கள் வலிமை, முற்போக்கான சிந்தனை

இஞ்ச்கேப் நிறுவனம் உலகில் உள்ள அனைத்து நாடுகளின் இணக்கத்துடனும் நெறிமுறைக்கு உட்பட்டும் ஊழியர்களுடன் இணைந்து சரியான முடிவெடுத்து பணியாற்றுகிறது. இஞ்ச்கேப் அதன் ஊழியர்கள் சரியான முடிவை எடுக்க தேவையான அனைத்து ஆதரவையும் அளிக்கிறது.

## உறுதியாக, தெளிவாக, சிக்கலின்றி

இஞ்ச்கேப்பின் வணிக நடத்தை கோட்பாடு நெறிமுறைகள் நிறுவனத்தின் கலாச்சாரத்தை, நிறுவனத்தை தெளிவாகவும் சுருக்கமாகவும் பிரதிபலிக்கும்.

# தொகுப்பைபற்றி

## சட்டத் தொகுப்பு என்றால் என்ன?

இந்தத் தொகுப்பானது வணிக நடத்தைகள் நெறிகள் (“தொகுப்பு” ) இஞ்ச்கேப்பில் பணியாற்றும் ஊழியர்களுக்கு அவற்றின் மதிப்புகள், விதிமுறைகள், குறிக்கோள்கள், வணிக நடைமுறைகள் ஆகியவற்றை கற்பிக்கின்றது. சில விதிமுறைகள் இஞ்ச்கேப் எப்படி சட்டம் மற்றும் நெறிமுறைகளுடன் பிணைக்கப்பட்டுள்ளது என்பதையும், சில விதிமுறைகள் ஊழியர்களுடன் எவ்வாறு அர்ப்பணிப்புடன் உள்ளது என்பதையும், சில விதிமுறைகள் நுகர்வோர் மற்றும் விற்பனையாளரிடம் எப்படி உறவு வைத்துள்ளது, சில விதிமுறைகள் இஞ்ச்கேப் எப்படி நெறிமுறையுடனும் செயல்படுகிறது என்பதை குறிக்கிறது.

இந்தத் தொகுப்பில் இஞ்ச்கேப் நிலைத்தன்மை மற்றும் பொறுப்புகள் உள்ளது. ஆனால் இதர நிறுவனங்களை போல் நாமும் தவறு செய்யலாம். ஆனால் நம் நிறுவனம் தெளிவான பார்வையுடன் தங்கள் தவறுகளைத் திருத்திக் கொண்டு மேலும் வளர முயற்சிக்கும்.

ஆவணங்களை “சாசனமாக” கருதி இஞ்ச்கேப் நிறுவனம் வணிக அணுகுமுறையை மேம்படுத்தி இஞ்ச்கேப் தன் தொழில்முறையை சீர்ப்படுத்தும்.

## சட்டத் தொகுப்பை எப்படி உபயோகிப்பது?

இந்தத் தொகுப்பில் உள்ள நடைமுறைகள் மற்றும் விதிமுறைகளை இஞ்ச்கேப்பின் இதர கொள்கைகளுடன் சேர்ந்து உபயோகிக்கவும். இந்தத் தொகுப்புகள் அனைத்தும் நம் நிறுவனத்தில் உள்ள மேலதிக விதிகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டு பின்பற்றப்பட வேண்டியவை ஆகும்.

இஞ்ச்கேப்பின் வெற்றிக்கு முக்கிய காரணியாக இருப்பது அனைத்து ஊழியர்களும் வணிகத்தை விதிகளுக்கு உட்பட்டு செய்வதே. இஞ்ச்கேப் நிறுவனமும் வணிகம் சார்ந்த விதிமுறைக்கு உட்பட்டு செயல்படும். ஊழியர்கள் இவ்விதிகளை சரியாக புரிந்துக்கொண்டு புத்துணர்ச்சியோடு செயல்படவேண்டும். வணிகம் சார்ந்த முக்கிய விதியானது இணக்க கொள்கைக்கு உட்பட்டதே. ஊழியர்களும் இவ்விதிகளை தங்களின் வழிக்காட்டியாக நினைத்து தனிப்பார்வையுடன் அணுகலாம்.

முக்கிய ஆவணங்களை தாங்களாகவே ஒரு நகல் எடுக்கலாம் அல்லது இஞ்ச்கேப் இணையதளத்திலோ அல்லது அகச்சேவையில் வைக்கப்பட்டுள்ளதை பார்த்துக்கொள்ளலாம்.

## விதிகள் யாரை/எவற்றை கட்டுப்படுத்தும்?

அனைத்து இஞ்ச்கேப் ஊழியர்கள் கடை நிலை ஊழியர்கள் முதல் தலைமை நிர்வாக அதிகாரி, இயக்குனர் குழு, மூத்த தலைவர்கள் மேலும் துணை முகவர்கள், துணை ஒப்பந்ததாரர், விற்பனையாளர்கள், ஆலோசகர்கள், மூன்றாம் நபர் மற்றும் இஞ்ச்கேப்பில் இணைந்து பணியாற்றும் அனைவருக்கும் பொருந்தும். அனைவரும் புரிந்துணர்வு கொண்டு விதிகளை ஏற்று நடக்க வேண்டும். விதிகளை மதிக்க தவறினால் அவர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## விதிகள் மற்றும் கொள்கைகளில் ஏதேனும் முரண்பாடு ஏற்பட்டால் என்ன விளைவு?

இஞ்ச்கேப்பில் கொள்கைகள் மற்றும் செயல்முறைகள் விதிகளுக்குட்பட்டு ஒரே நேர்க்கோட்டில் இருக்கவேண்டும். ஏதேனும் விரும்பத்தகாத சூழ்நிலையில் இஞ்ச்கேப்பில் கொள்கைகளுடன் ஒத்துவராவிட்டால், முதல் நடவடிக்கையாக இனக்குழு அதிகாரி அல்லது கொள்கைகளை உருவாக்கியவரிடம் கேட்கப்படும். சில சமயங்களில் விதிகளை விட கொள்கைகள் கடுமையாக இருக்கும். தொழில் அல்லது இடம் சார்ந்த தேவை இருக்குமானால் உள்ளூர் கொள்கைகள் நிறுவன கொள்கைகளைவிட கடினமாக இருக்கலாம்; அவை நிறுவன கொள்கைகளை விட குறைந்த அளவு கடினமாக இருத்தல் மிக அரிது.



# இஞ்ச்கேப் கீழ்க்கண்டவை குறித்து உத்தரவாதம் அளிக்கிறது...

## குரலெழுப்புதல்

பிரச்சினைகள் அல்லது பிரச்சினைகளாக கருதப்படும் விஷயங்களை உடனடியாக அறிந்துக் கொண்டு, இணக்கம் மற்றும் நன்னடத்தை குறித்த புகார்களின் மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பது நிறுவனம் மற்றும் அதில் சம்பந்தப்பட்ட அனைவரின் நலனுக்கும் இன்றியமையாத ஒன்று என்பதை இஞ்ச்கேப் நன்கு அறிந்துள்ளது. இதை செயலாக்கம் செய்ய நிறுவனத்திற்கு அறிக்கை அளிக்கும் பலவிதமான முறைகள் உள்ளன.

### எவ்வாறு குரலெழுப்புதல்

இஞ்ச்கேப் ஊழியர்களை தங்கள் மேலாளரிடம் பேச சொல்லி ஊக்குவிக்கிறது. தேவைகளை நிறைவேற்றவும் சரிசெய்யவும், இதுவே சரியான வழியாக கருதுகிறது. இது எளிதான வழி அல்ல. ஊழியர் அல்லாதவருக்கு இது சரியான முறையும் அல்ல. மூன்றாம் நபர் ஹாட்லைன் தொலைபேசி அல்லது இணையம் வழியாக தங்கள் அறிக்கையை தாக்கல் செய்யலாம். இதை அநாமதேயமாகவும் செய்யலாம். அதற்கு மாறாக, பிரச்சனைகளை இணக்க மின்னஞ்சல் முகவரி அல்லது இனக்குழு அதிகாரியிடமும் நேரடியாக அனுப்பலாம். இன்னொரு வகையாக ஊழியர்கள் உள்ளூர் அல்லது வட்டார மனித வள மேம்பாட்டுத் துறை அல்லது சட்டத் துறையை அணுகலாம்.

மேலும் தகவலுக்கு பின்பக்கத்தை பார்க்கவும். இதன் மூலம் மேலே விவரிக்கப்பட்ட முறைகளின் வாயிலாக எவ்வாறு அறிக்கை அளிக்க வேண்டும் என்பதை தெரிந்து கொள்ளலாம்.



### எந்த விதமான பிரச்சினைகள்/ அக்கறைகளை எழுப்பலாம்?

இஞ்ச்கேப்பின் கொள்கைகள் அல்லது உள்ளூர் அல்லது சர்வதேச விதிகள் மீறப்பட்டுள்ளதாக கருதும் எந்த ஊழியர்களும் மற்றவர்களும் கேள்வி எழுப்புவது அத்தியாவசியமாகும். இஞ்ச்கேப்பின் எந்தவொரு கொள்கை குறித்தும் சந்தேகம் இருக்குமானால் கேள்வி எழுப்புவது அவசியமாகும். உதாரணமாக:

- இலஞ்சம் அல்லது வேலை நிறைவேறுவதற்காக அளிக்கப்படும் சட்டத்திற்கு புறம்பாக அளிக்கப்படும் பணம்
- திருட்டு அல்லது மோசடி
- போலியான நிறுவன ஆவணங்கள்
- நுகர்வோர் அல்லது இஞ்ச்கேப் சொத்துகளை சரியாக பராமரிக்கவில்லை எனில்
- துஷ்பிரயோகம் அல்லது கொடுமைப்படுத்துதல்
- பாகுபாடு
- நலவிரும்பிகளின் மோதல்கள்
- அசாதாரணமான மதிப்பு உள்ள பரிசு பொருட்கள் அல்லது பொழுதுபோக்குகளைக் கொடுப்பது அல்லது வாங்குவது
- இரகசிய தகவல்களை கசியவிடுதல்
- இஞ்ச்கேப் நிறுவன கொள்கைகளுடன் முரண்பட்ட நடத்தை
- தடைசெய்யப்பட்ட நாடுகள் அல்லது நிறுவனங்களுடன் தொழில் செய்தல்
- இஞ்ச்கேப் கொள்கை குறித்த குழப்பம்

ஊழியர்கள் தங்கள் சுயபுத்தியின் அடிப்படையில் நடந்துக் கொள்ள வேண்டும் என்று இஞ்ச்கேப் எதிர்ப்பார்க்கிறது; உங்களுக்கு ஒரு விஷயம் சரி என்று தோன்றவில்லை என்றால், அது அனேகமாக சரியான விஷயமாக இருக்காது. உறுதியாக தெரியவில்லை என்றால் ஊழியர்கள் ஆலோசனையை நாடுவதை இஞ்ச்கேப் எதிர்ப்பார்க்கிறது.

### ஒரு பிரச்சினை/அக்கறையை எழுப்பும் போது என்ன நிகழும்?

இஞ்ச்கேப் அனைத்து தகவல் அறிக்கையும் சீரிய நோக்கில் பரிசீலிக்கும். வெளி நபர் போல் ஆராய்ந்து இணக்கத்தின் நெறிமுறையான அறிக்கைக்கு உட்பட்டு இனக்குழு அதிகாரியின் தலைமையில் சீரான மற்றும் நேர்மையான ஆய்வு செய்யப்படும். அநாமதேய அறிக்கையாக இருந்தால் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி அடையாள எண் மூலம் அவரின் கேள்விகளுக்கு தக்க விடையளிக்கப்படும். ஆனால் தவறு செய்வதாக நிர்வாகம் கருதினால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### இஞ்ச்கேப் உத்தரவாதம் பழிவாங்கப்படுவதில் இருந்து பாதுகாப்பு

நல்ல நோக்கத்துடன் அறிக்கை அளிக்கும் ஊழியரையோ அல்லது மூன்றாம் தரப்பையோ பாதுகாப்பது இஞ்ச்கேப்பின் கடமையாகும். ஆதலால் நேர்மையான நோக்கத்துடன் கேள்விகளை எழுப்பும் அனைவரையும் பாதுகாக்க இஞ்ச்கேப் கடுமையான பழிவாங்குதல் தடுப்புக் கொள்கையை கொண்டுள்ளது. அவர்களின் பணிநிலையை கடந்து இந்தப் பாதுகாப்பு அனைத்து ஊழியர்களுக்கும் பொருந்தும். மேலும் அநாமதேயாக தகவல் அளிப்பவர்களை கண்டறிய இஞ்ச்கேப் எந்த முயற்சியும் எடுக்காது.

### இஞ்ச்கேப் உத்தரவாதம் உள்ளக மதிப்பாய்வுகள்

நிறுவனம் எப்பொழுதும் ஆய்வறிக்கைகளை அடிப்படையின் மட்டுமல்லாது, தணிக்கையாளர்கள் மற்றும் அவர்களின் சொந்த இணக்க வணிக நடைமுறை மற்றும் நெறிமுறைப்படியும் இணக்க கொள்கைப்படியும் நடக்கும். இஞ்ச்கேப் நிறுவனம் உள் தணிக்கையாளர்களையும் நிர்வகிக்கிறது. உலகளவில் நடக்கும் மாற்றங்கள் நடவடிக்கைகளை கூர்ந்து கவனிக்கும்.

இந்தத் துறை தங்களின் ஆய்வை நேரடியாக இஞ்ச்கேப் பெரு நிறுவனத்திடம் அவர்களின் விசாரணை மற்றும் விமர்சனங்களுக்கு முழுப் பொறுப்பேற்று இஞ்ச்கேப்பின் அனைத்து துறையினருக்கும் விடையளிக்கும்.

## இஞ்ச்கேப் கீழ்க்கண்டவை குறித்து உத்தரவாதம் அளிக்கிறது...

# இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு

வருந்தத்தக்க வகையில் ஊழலானது எல்லா நாட்டிலும் உலக அளவில் உள்ள அனைத்து நாடுகளிலும் ஊடுருவியுள்ளது. உலகில் ஊழல் பொதுவாக நடைபெறும் நாட்டிலும் இஞ்ச்கேப் வேலை செய்கிறது. நிறுவனம் உள்ளூர் சட்டம், சர்வதேச சட்டம் வெளிநாட்டு ஊழல் விதிகள், இங்கிலாந்து ஊழல் விதி, வணிக நடத்தை கோட்பாடு மற்றும் நெறிமுறைகளுக்கு உட்பட்டு அனைத்து இடங்களிலும் அனைத்து நேரங்களிலும் வேலைச் செய்யும்.

### இஞ்ச்கேப்
### இலஞ்சம் மற்றும் ஊழல்

இஞ்ச்கேப் ஷிப்பிங் மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ ஏறத்தாழ உலகில் உள்ள அனைத்து துறைமுகங்களிலும் வேலை செய்கிறது. வெவ்வேறு விதமான துறைமுகங்கள் வேறு வேறு விதமான சவால்கள் வேறு வேறு விதமான ஊழல்கள் உள்ளது. இஞ்ச்கேப் ஊழலை பொறுத்துக்கொள்ளாது. இஞ்ச்கேப் எந்த விதமான சூழ்நிலையிலும் இலஞ்சம் கொடுப்பதையோ வாங்குவதையோ ஊழல் செய்வதையோ பணப் பரிவர்த்தனைகளையோ எங்கேயும் எப்பொழுதும் பொறுத்துக் கொள்ளாது.

சில குறிப்பிட்ட சூழ்நிலையை தவிர அதாவது பணி செய்ய கடினமான சூழலில் உள்ளூர் மற்றும் உலகளாவிய சட்டத்திட்டத்திற்கு உட்பட்டு இந்த மாதிரியான நடவடிக்கைகளை புறக்கணித்தாலும் வணிக நடைமுறைக்காகவும் அதன் நன்மைக்காகவும் பொறுத்துக் கொள்ளும். ஆனால் இஞ்ச்கேப் இந்த அணுகுமுறையில் இருந்து விலகி இருக்கும்.

நடைமுறையில் இஞ்ச்கேப்பின் கொள்கைப்படி எப்பொழுதுமே இலஞ்சம் அல்லது வேறு வகையான பணப்பரிமாற்றத்தை துறை அதிகாரிகளிடமோ, வாங்குவோரிடமோ அல்லது தொழில் நிறுவனத்திடமோ யாரிடமும் தராது. நெறிமுறை அல்லாத எந்த பரிமாற்றத்தையோ இஞ்ச்கேப் ஒத்துக்கொள்ளாது. நுகர்வோர் எவர் ஒருவரும் இலஞ்சம் அளிக்க வந்தாலும் ஒத்துழைக்காது. அதே நேரத்தில் இலஞ்சத்திற்கு எதிராக உள்ள நுகர்வோர்க்கு ஆதரவாக இருக்கும். மூன்றாம் நபர் அல்லது இலஞ்சம் கொடுக்க தயாராக உள்ள நபரிடம் இஞ்ச்கேப் எவ்வித நிலையிலும் வேலை செய்யாது.

### இஞ்ச்கேப்
### அடிமைத்தன எதிர்ப்பு மற்றும் கடத்தல் எதிர்ப்பு

அடிமைப்படுத்துதல் மற்றும் மனித கடத்துதல் நடைபெறும் இடங்களில் இஞ்ச்கேப் வேலை செய்யாது. மேற்கூறிய நடைமுறைகளை இஞ்ச்கேப் எப்பொழுதும் பொறுத்துக்கொள்ளாது. தன் வரைமுறைக்குள் இந்த விதமான நவீன அடிமை முறை நடக்காதவாறு இஞ்ச்கேப் கவனித்துக் கொள்ளும். குழந்தை தொழிலாளிகள், குறைந்த கூலி, அதிக வேலை நேரம் மற்றும் பணி நடைமுறைகள் ஆகியவை இதில் அடங்கும். இஞ்ச்கேப் முகவர்கள், வாங்குவோர், மூன்றாம் நபர் யார் இஞ்ச்கேப்பில் வேலை செய்தாலும் அவர்களுக்கு இந்த விதிகள் பொருந்தும்.



## இஞ்ச்கேப் கீழ்க்கண்டவை குறித்து உத்தரவாதம் அளிக்கிறது...

# அதன் வாடிக்கையாளர்கள்

வாடிக்கையாளரிடம் எப்படி பொறுப்புடன் இஞ்ச்கேப் நன்றாகப் புரிந்து வைத்துள்ளது. இஞ்ச்கேப் வாடிக்கையாளர்களை அவர்களின் இருப்பிடம், பணிச்சூழல், வேலைச் செய்யும் திறனை வைத்து குறைத்து மதிப்பிடாது. நெறிமுறைக்கு உட்பட்டு இஞ்ச்கேப் எல்லா வேலையும் எல்லா நாட்களிலும் வணிக நெறிமுறையுடன் செய்யும்.

### இஞ்ச்கேப்
### தன் வாடிக்கையாளர்களின் தரத்தை நிலைநாட்ட உறுதி அளிக்கிறது

இஞ்ச்கேப்பின் தொகுப்புகள் மற்றும் இணக்கக் கொள்கைகள் அனைத்தும் தொழிலோடு தொடர்புள்ளவையே. யாரையும் கட்டுப்படுத்தாமலும் தேவையில்லாமல் அதிகாரம் செய்வதோ இல்லாமல் இருக்கும் தன்மை உடையவை. தன் விதிமுறை தொகுப்புகள் வாடிக்கையாளரின் தொகுப்புகளுக்கு நிகராகவும் அல்லது அதை விட மேம்பட்டதாகவும் இருக்கும் என்பதை இஞ்ச்கேப் உறுதியாக நம்புகிறது. அதே நேரத்தில் வாடிகையாளரின் கருத்துக்கு உட்பட்டு இஞ்ச்கேப்பின் நெறிகளை மீறாமல் நிலைப்பாட்டுக்கு தேவையான மாற்றங்கள் இருந்தால் ஏற்க தயங்காது.

### இஞ்ச்கேப்
### வெளிப்படைத்தன்மை

இஞ்ச்கேப் வாடிக்கையாளரின் விருப்பத்திற்கேற்ப அவர்களுடன் வர்த்தகம் செய்யும். தேவையான நேரத்தில் தேவையான தகவல்கள் அளித்து, சூழ்நிலைக்கு தகுந்தவாறு வாடிகையாளர்களை எச்சரித்து எப்படி இருக்க வேண்டும் என்பதை உணர்த்தும். இஞ்ச்கேப்பின் அனைத்து நடைமுறைகளும் வெளிப்படைத்தன்மையுடன் இருக்கும்.

### இஞ்ச்கேப் உத்திரவாதம்
### உயர்தரமான இணக்கம்

இஞ்ச்கேப் ஒரு உலகளாவிய நிறுவனம். தங்களின் சொந்த அலுவலகத்தை உலகம் முழுதும் நிர்வகிக்கும் திறமையோடு உள்ளது. வெவ்வேறு நாடுகளுக்கு தங்களின் சொந்த சட்டம், கட்டுப்பாடுகள் மற்றும் வழிமுறைகள் உள்ளது என்பதை அறிந்துள்ளது. வெவ்வேறு சூழ்நிலைகளுக்கு தங்களின் செயல்பாட்டை மாற்றிக்கொள்ளாமல், வளைந்து கொடுத்து சூழலுக்கேற்ப தம்மை மாற்றி அமைத்துக் கொண்டு செயல்படுகிறது என்பதில் பெருமைக் கொள்கிறது. உலகைச் சுற்றியுள்ள நாடுகளில் நெறி மாறாமல் அதே நேரத்தில் உள்ளூர் வழிமுறைகளுக்கு மதிப்பளித்து, ஆனால் எந்த சமரசமும் செய்யாமல் தன் கொள்கைகளை பின்பற்றுகிறது. இஞ்ச்கேப் நிறுவனம் வாடிக்கையாளர்களுக்கு ஒரு நாட்டில் எவ்வாறு வணிகம் செய்கிறதோ அதே போலத்தான் அனைத்து நாடுகளிலும் நிலை மாறாமல் செய்கிறது என்று உறுதியளிக்கிறது.

### இஞ்ச்கேப்பின் உத்திரவாதம்...
### வாடிகையாளர்களுக்கு துணை நிற்பது

இலஞ்சம், ஊழல் மற்றும் எதிர்ப்புகளுக்கு எதிராக உறுதியுடன் இருக்கும். அது இஞ்ச்கேப் செய்யும் பணியை பாதிக்கும் அல்லது பணி மெதுவாக நடக்கும் அல்லது இஞ்ச்கேப் இதற்காக பெரிய தொகை கொடுக்க நேரிடும். நெறியுடன் நடப்பது எளிதான ஒன்றல்ல. மேலும் இஞ்ச்கேப் மற்றும் அதன் வாடிக்கையாளர்களுக்கு இது தொழில்ரீதியாக பாதிப்பை ஏற்ப்படுத்தலாம்.

இஞ்ச்கேப் தங்களின் அழுத்தத்தை பொருட்படுத்தாமல் வாடிக்கையாளர், வாங்குவோர், மூன்றாம் நபருக்கும் இஞ்ச்கேப் இணைந்து சேவையாற்றும். இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக உள்ளவர்களுக்கு தங்களால் முடிந்த உதவி அதாவது துணை நிற்பது, அறிவுரை, கடின சூழலில் துணை நிற்பது ஆகியவற்றை செய்யும். ஊழலுக்கு எதிராக உள்ள யார் ஒருவருக்கும் இஞ்ச்கேப் துனை நிற்க்கும்.

### இஞ்ச்கேப் உத்தரவாதம்
### அரசு வாடிக்கையாளருடன் வர்த்தகம்

இவர்களுடன் இணையும் பொழுது அரசு முகவர்கள், இராணுவம் மற்றும் அரசு துறைகளில் இஞ்ச்கேப் கொள்கைகளை தளர்த்தாமல், முறையற்ற அணுகுமுறையை இஞ்ச்கேப் முற்றிலும் சகித்துக்கொள்ளாது, மிக கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். இஞ்ச்கேப் இந்தத் துறை சார்பாக சிறப்பு கொள்கைகளை கொண்டுள்ளது. குறிப்பிடத்தக்க கொள்கை முடிவுகளுடன் சிறப்பு பயிற்சி பெற்ற நிபுணர்களுடன் பணியாற்றும். இஞ்ச்கேப் அரசாங்க வாடிக்கையாளர்களுடன் தொழில் செய்வது எப்படி என்ற ஒரு தனிக்கொள்கையை கொண்டுள்ளது. ஊழியர்கள் அல்லது வாடிக்கையாளருக்கு அரசாங்க வாடிக்கையாளர்கள் சம்பந்தப்பட்ட இணக்கம் குறித்த கேள்வி இருந்தால் அரசு இணக்கத்தின் வழிகாட்டியுடன் அல்லது இனக்குழு அதிகாரியின் வாயிலாக தெளிவுக் கொள்ளலாம்.

### இஞ்ச்கேப் உத்தரவாதம்
### மூன்றாம் தரப்பின் இணக்க முறைப்படுத்தல்

இஞ்ச்கேப் ஆயிரக்கணக்கான மூன்றாம் தரப்பு வாடிக்கையாளர்களை உலகெங்கிலும் நிர்வகிப்பதால் மிகத்தரமான மற்றும் நம்பகமான சேவையை இஞ்ச்கேப்பின் வாடிக்கையாளர்கள் எதிர்ப்பார்க்கிறார்கள். இஞ்ச்கேப் தங்களின் துணை முகவர், வாங்குவோர், துணை ஒப்பந்ததாரர், தற்காலிகப் பணியாளர், விநியோகிப்பவர், ஆலோசகர்கள், வாங்குவோர் அனைவரும் நெறிமுறைகளை பின்பற்றுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறது. எந்த மூன்றாம் தரப்போ நெறிமுறைக்கு உட்பட விரும்பாவிட்டால் அவர்கள் இஞ்ச்கேப் விநியோக குழுமத்தில் இருந்து நீக்கப்படுவர்.



## இஞ்ச்கேப் கீழ்க்கண்டவை குறித்து உத்தரவாதம் அளிக்கிறது...

# அதன் ஊழியர்கள்

இஞ்ச்கேப் ஊழியர்கள் தங்களின் சிறந்த திறமையை வெளிக்காட்ட வேண்டும் என விரும்புகிறது. இதற்கு தகுந்த பணிச்சூழல், தேவையான உபகரணங்கள், இனிமையான உகந்தச் சூழலை அளிக்கிறது.

### இஞ்ச்கேப் ஊழியர்களுடன் சமத்தன்மை

இணக்க நெறிமுறைக்கு உட்பட்டு இஞ்ச்கேப் அனைத்து ஊழியர்களையும் சமமாக பாவிக்கும். இஞ்ச்கேப்பின் விதிகள், கொள்கைகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் அனைவருக்கும் சமமே. இணக்க விதிகளுக்கு எதிராக இருப்பவருக்கு குறைந்த பட்ச சகிப்பு தன்மை இன்றி மேல் மட்டம் முதல் அடிமட்டம் வரை அனைத்து ஊழல்களையும் சமமாக பாவித்து நடவடிக்கை எடுக்கும்.

அவர்களின் உயர்ந்த பதவி, நீண்ட காலப்பணி, குழுமத்தின் தலைமைப் பொறுப்பு, வயது, இனம், மதம் எதையும் கருத்தில் கொள்ளாது. அனைத்து ஊழியர்களும் சமம் என்பதே இஞ்ச்கேப்பின் தலையாய கொள்கை.

### இஞ்ச்கேப் இணக்க பணியாளர்கள்

இஞ்ச்கேப்பின் இணக்க மற்றும் நெறிமுறைகளுக்கான முழுநேர இணக்கத் துறையின் மூலம் தெளிவாக வெளிப்படுகிறது. இந்த துறை இஞ்ச்கேப்பின் இணக்க செயல்திட்டத்தை செயல்படுத்துவதற்கான பொறுப்பை கொண்டுள்ளது. குழுவின் இணக்க அதிகாரியே செயல்பாட்டை மேம்படுத்துவதற்க்கும் இணக்க விதிகளை கவனமாக எடுத்து சொல்வதற்க்கும் பொறுப்பாவார்.

இனக்குழு அதிகாரி தன் அறிக்கைகளை தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் இயக்குனர் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும். இனக்குழு அதிகாரியின் வேலையானது யார் யார் நெறிமுறைக்கு எதிராக செயல்படுகிறார்கள், இணக்கம் தொடர்பான ஊழியரின் கேள்விகளுக்கு பதிலளிப்பது, உறுதுணையாக நிற்பது. ஊழியர்கள் இனக்குழு அதிகாரியிடம் நம்பிக்கையுடன் பேசலாம்.



### இஞ்ச்கேப் உத்தரவாதம் பயிற்சிகள்

இஞ்ச்கேப் ஊழியர்களின் பணி தொடர்பான அனைத்து பயிற்சிகளுக்கும் துணை நிற்க்கும். இஞ்ச்கேப்பில் பணியாற்றுவதற்க்கு முன் இணக்கத்தின் நெறிமுறைகளை அனைத்து ஊழியர்களும் அறிந்து கொள்ள வேண்டும் என இஞ்ச்கேப் விரும்புகிறது. இஞ்ச்கேப்பில் வேலைக்கு சேரும் ஒவ்வொரு ஊழியரும் இக்கட்டாய பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். கூடுதலாக ஒவ்வொரு ஊழியரும் இஞ்ச்கேப் வழங்கும் தங்களை புதுப்பிக்கும் பயிற்சியும் எடுக்கலாம்.

சீரான பயிற்சியின் மூலமே இணக்க கொள்கை மற்றும் நெறிமுறைகளை அறிந்து, கவனத்துடன் செயல்பட்டு, இணக்கத்துடன் ஒத்துழைத்து நடப்பர் என இஞ்ச்கேப் நம்புகிறது. அப்பொழுது தான் அவர்கள் மனதளவில் இணக்க விதிகளுடன் இணைந்து வேலை செய்ய தயாராவார்கள்.

இணக்கம் மற்றும் நெறிமுறைக்காண பயிற்சி வகுப்புகள் அனைத்து ஊழியர்களுக்கும், வயது வரம்பில்லாமல், பணி அடிப்படையில் இல்லாமல், நீண்டக் காலப் பணி அடிப்படையில்லாமல் அனைவரையும் பயிற்சி எடுக்குமாறு கேட்டு கொள்கிறது. அடிமுதல் கடை வரை என்பதை இஞ்ச்கேப் நம்புகிறது. மேலும் மூத்த அதிகாரிகள் முன்னின்று பயிற்சியில் ஈடுபட்டு, தங்களின் சொந்த கருத்தை விலக்கி வைத்து இணக்கத்தின் விதி மற்றும் நெறிமுறைகளை உலகளவில் பரப்பும் என நம்புகிறது.

ஏனெனில் இது உலகளாவிய நிறுவனம். பல்வேறு மொழிகளில் பயிற்சி வகுப்புகள் இருப்பதால் ஊழியர்களால் புரிந்துக் கொள்ள முடியும். ஒரு வேளை பயிற்சி வகுப்புகள் கடினமாக இருந்தால் மாற்று வழிகளை யோசித்து பயிற்சியளிக்கும். இவ்வணிக நெறிமுறைகள் பயிற்சியின் மூலம் உலகின் கடைக்கோடி வரை போய் சேரவேண்டும் என்பதில் இஞ்ச்கேப் உறுதி கொண்டுள்ளது.

### இஞ்ச்கேப் உத்தரவாதம் எளிதாக அறிக்கை தயாரித்தல்

இணக்க கொள்கைகள் மற்றும் நெறிமுறைகள் ஏதேனும் அசாதாரண சூழலில் தோல்வி அடைந்தால் நிர்வாகம் அதை தெரிந்துக் கொள்ள விரும்புகிறது. முன்னர் கூறியப்படி கேள்வி கேட்பது கையேட்டின் பின்பக்கத்தில் விரிவாக கொடுக்கப்பட்டுள்ளது. ஊழியர்களோ அல்லது மூன்றாம் தரப்போ பல்வேறு விதமாக தங்கள் அறிக்கைகள், அக்கறைகள் அல்லது கேள்விகளை எழுப்பலாம். அவர்களின் கேள்விகளுக்கு இணக்ககுழு முழு மதிப்பளித்து விடையளிக்கும். யாராவது தெரிந்தே பொய் அறிக்கை கொடுத்தால் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## இஞ்ச்கேப் கீழ்க்கண்டவை குறித்து உத்தரவாதம் அளிக்கிறது...

# அதன் பணியாளர்கள்

### இஞ்ச்கேப் கொள்கைக்கான செயல்முறைகள்

தனிப்பட்ட முறையில் அனைத்து அறிக்கைகளும் ஆய்வுச் செய்யப்பட்டு சார்பற்றம் முடிவு எடுக்கப்படும் என்பதற்கான உத்தரவாதத்தை இஞ்ச்கேப் அளிக்கிறது. விசாரணை இனக்குழு அதிகாரியால் மேற்கொள்ளப்படும். ஊழியர்கள் விசாரணைக்கு ஒத்துழைத்து தகவல்கள் இரகசியமாகப் பாதுகாக்க வேண்டும் என்பதை இஞ்ச்கேப் எதிர்பார்க்கிறது. விசாரணை முடிந்தவுடன் தேவையான ஒழுங்கு நடவடிகைகள் நடுனிலைமையுடனும் நியாயமான முறையிலும் எடுக்கப்படும்.

### இஞ்ச்கேப் உத்தரவாதம் பாதுகாப்பான பணிச்சூழல்

துறைமுகங்கள், கப்பல்துறை அலுவலகம் கூட சில நேரத்தில் ஆபத்தானது. வேலைகளை முழு வெற்றியுடன் தீங்கில்லாத வகையில் செய்வதையே இஞ்ச்கேப் விரும்புகிறது.

இணக்க கொள்கைகள் மற்றும் நெறிமுறைக்கு உட்பட்டு பாதுகாப்பான பணியிடங்களில் வேலை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உயர்தர பாதுகாப்பு, சுகாதாரம் போன்றவை உறுதிச்செய்யப்பட்டு ஊழியர்கள் கடல், துறைமுகம் அல்லது அலுவலகத்தில் அர்ப்பணிப்புடன் பணி செய்ய இது உதவும்.

வேலைசூழல், உடல் நலம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் துறையின் (HSSE) மூலம் ஊழியர்களுக்கு உகந்த பயிற்சியளித்து இஞ்ச்கேப் உலகத்தரம் வாய்ந்த நிறுவனம் என்பதை உறுதி செய்கிறது.

பணிசூழலில் துஷ்பிரயோகம், துன்புறுத்தல், சுரண்டல் போதைப்பொருள் மற்றும் மது புழக்கம் அற்ற இடமாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளது.

இஞ்ச்கேப்பில் உள்ள ஒவ்வொரு ஊழியரும் பார்வையாளரும் பணிச்சூழல் பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் உள்ளது என்பதை உணர வேண்டும். அவ்வாறு ஒருவர் உணரவில்லை என்றால் உடனே அதுக்குறித்து பேச வேண்டும்.

### இஞ்ச்கேப் உத்தரவாதம் நல்ல நிர்வாகம்

மேலாளரிடம் நல்ல தரத்தை இஞ்ச்கேப் எதிர்ப்பார்க்கிறது. இஞ்ச்கேப் மேலாளர்கள் தங்கள் தரத்தை கொள்கையின் மூலம் மட்டும் இல்லாமல் செயலில் நிரூபிக்கவேண்டும். தலைமை நிலையில் உள்ளவர்கள் நெறிமுறைகளை பின்பற்றுவதில் முன்னுதாரணமாக திகழ்ந்து, இஞ்ச்கேப்பின் மதிப்புகளை எடுத்துரைத்து, இணக்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளை எச்சரித்து, பாதுகாத்து, அனைத்து ஊழியர்களையும் நெறியுடன் கூடிய செயல்பாட்டில் இருக்க வைத்து, உகந்த பணிச்சூழல் இருக்கிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

மேலாளர்கள் தங்களின் நெறிமுறையான நடத்தையின் மூலம் சந்தர்ப்பம் ஏற்படும் போது எல்லாம் உணர்த்த வேண்டும் என இஞ்ச்கேப் எதிர்ப்பார்க்கிறது. ஊழியர்களுக்கு உகந்த பணிச்சூழலை ஏற்படுத்தி, நெறிமுறை மீறாமல் வேண்டுவதை பயமில்லாமல் கேட்கும் சூழலை ஏற்படுத்தி பதிலடி கிடைக்குமோ என்ற பயமில்லாத சூழலை மேலாளரே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மேலாளருக்கு தேவையான பயிற்சி உபகரணத்தை இஞ்ச்கேப் அளிக்கும்.

### பதிலுக்கு...

அனைத்து ஊழியர்களும் தொழில் முறையை நேர்மையாகவும், வெளிப்படைத்தன்மையுடனும், தங்களின் முழுத்திறமையையும் வெளிப்படுத்தி, கொள்கை விதிகளுக்கு உட்பட்டு, இணக்க நெறிமுறைகளுக்கு உட்பட்டு, பயிற்சி காலத்தில் உற்சாகமுடன் பங்கேற்று, தணிக்கை அல்லது விசாரணைகளுக்கு ஒத்துழைத்து, தவறு எனப்படுவதை சரியான நேரத்தில் எடுத்துச் சொல்லி, தங்களுக்கு புரியாததை விளக்கச் சொல்லி, முழுத்திறமையுடன், இணக்க நெறிமுறைகளில் குழப்பத்தை தவிர்த்து வேலை செய்ய வேண்டும்.



## இஞ்ச்கேப் கீழ்க்கண்டவை குறித்து உத்தரவாதம் அளிக்கிறது...

# மூன்றாம் நபரின் குறுக்கீடுகள்

### இஞ்ச்கேப் சரிப்பார்த்தல்

துணை ஒப்பந்ததாரர்கள், வாங்குவோர் ஏற்பாடு செய்து நிறைய வேலைகளை செய்கிறது. உலகெங்கிலும் உள்ள ஆயிரக்கணக்காண சேவைகளை வைத்து இஞ்ச்கேப் வர்த்தகம் செய்கிறது.
உடன்படிக்கையில் நுழையும் முன் மூன்றாம் தரப்பின் பின்புலத்தை ஆய்வு செய்தே ஏற்றுக்கொள்ளும். இஞ்ச்கேப்புடன் வேலை செய்யும் அவர்களின் தகுதி நிலை முழு நேரமும் கண்காணிக்கப்படும்.

### இஞ்ச்கேப் தகவல்களை பாதுகாத்தல்

இஞ்ச்கேப் அதன் வாடிக்கையாளர்களிடம் இருந்து இரகசியமான தொழில்சார்ந்த தகவல்களை பெறுகிறது. இந்தத் தகவல்களை பாதுகாக்க இஞ்ச்கேப் அமைப்புகளை நிறுவ உத்திரவாதம் அளிக்கிறது.  இஞ்ச்கேப் ஐரோப்பிய ஒன்றியத்தின் தகவல் பாதுகாப்பு சட்டத்தின் அடிப்படையில் அதன் அமைப்புகள், கொள்கைகள் மற்றும் வழிமுறைகளை கட்டமைத்துள்ளது.

### இஞ்ச்கேப் நெறிசார்ந்த தொழில் உறவுகள்

பரிசுகளும் கேளிக்கை நிகழ்வுகளும் தொழில் வாழ்க்கையில் தவிர்க்க முடியாதவை. வாடிக்கையாளர்களுக்கு உணவு வாங்கி கொடுப்பதும் அல்லது வழங்குநரிடமிருந்து இனிப்பு பெட்டி ஒன்றை பெறுவதோ சாதாரணமான ஒரு விஷயம். இது நல்ல உறவை காத்து பேண உதவியாக இருக்கும். ஆனால் இது சரியான முறையில் செய்யப்பட வேண்டும் என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும்.

தொழில் சார்ந்த முடிவுகள் பாதிக்கப்படாத வண்ணம் மூன்றாம் தரப்புடன் பரிசுகள் மற்றும்/அல்லது பொழுதுபோக்கு அம்சங்கள் பரிமாறிக் கொள்ளப்படும் என்பதற்கு இஞ்ச்கேப் உத்திரவாதம் அளிக்கிறது. பரிசு மற்றும் பொழுதுப்போக்குகளுக்கு இஞ்ச்கேப் ஒரு வரையறை வைத்துள்ளது. அதை புரிந்துக் கொண்டு வாடிக்கையாளர் அல்லது வழங்குநர்கள் பரிசு அளிப்பதை தவிர்த்து, அது ஊழியர்களை தவறு செய்ய தூண்டி விடும் என்பதை உணர வேண்டும். அதனால் அனைத்து நேரங்களிலும் இஞ்ச்கேப் ஊழியர்கள் பரிசுகளைப் பெற இயலாது. அதே சமயம் இது குறித்த வாடிக்கையாளர் மற்றும் வழங்குநர்களின் கொள்கைகள் இஞ்ச்கேப் கொள்கையை விட கடுமையாக இருக்குமானால், இதை இஞ்ச்கேப் தவறாக எடுத்துக் கொள்ளாமல், அந்த கொள்கைகளின் வழிநடக்க உறுதியும் அளிக்கிறது.

ஊழியர்கள் தங்களுக்காகவோ அல்லது தன் குடும்ப நபர்கள் அல்லது நண்பர்கள் சார்பாகவோ எந்தவிதமான பரிசு, அன்பளிப்பு அல்லது இதர தனிநபர் சலுகைகளையும் இஞ்ச்கேப் நிறுவனத்தின் தற்போதைய அல்லது வருங்கால வழங்குநர்கள், முகவர்கள், ஆலோசகர்கள், வாடிக்கையாளர்கள் அல்லது போட்டியாளர்கள் இவர்களிடமிருந்து எதிர்பார்க்கவோ அல்லது கேட்கவோ கூடாது.

### இஞ்ச்கேப் கருத்து மோதலை தவிர்த்தல்

சில நேரங்களில் தொழில் சார்ந்த முடிவெடுக்கும் பொழுது உறவினர்கள் அல்லது நண்பர்கள் தலையிடுவதை தவிர்க்க முடியாது என்பதை இஞ்ச்கேப் நன்கு உணர்ந்துள்ளது.
வணிக முடிவுகள் அனைத்தும் தகுதிகள் அடிப்படையில் எடுக்கப்பட வேண்டும். ஏதேனும் கருத்து மோதல் இருந்தால் அவற்றை இணக்கத் துறையிடம் தெரிவிக்க வேண்டும். ஆராய்ந்து அல்லது அவற்றை ஆதரித்து மற்றும் பதிவு செய்ய இது உதவியாக இருக்கும்.

அரசியல் கட்சிகள் மற்றும் சமூக தன்னார்வலர் நிறுவனங்களுக்கும் இந்த கொள்கைகள் பொருந்தும். இஞ்ச்கேப் எந்த விதமான பரிசு பொருள்களையோ அல்லது இலவச சேவையையோ அரசியல் கட்சிகளுக்கு அளிக்காது. மேலும் அரசியலில் இருக்கும் அரசியல்வாதிகளுக்கோ அல்லது கடந்த ஓராண்டாக அரசியலில் இருந்து விலகி இருக்கும் அரசியல்வாதிகளுக்கோ நிறுவனத்தில் எந்த பதவியும் சலுகைகளும் கொடுக்கப்படமாட்டாது. தொண்டு நன் கொடைகள் இயக்குனர் குழு ஒப்புதல் அளித்த பிறகே ஏற்றுக்கொள்ளப்படும்.

### இஞ்ச்கேப் நியாயமான போட்டிகள்

இஞ்ச்கேப் வணிகத்தில் நல்ல போட்டியை விரும்புகிறது. ஆனால் போட்டியை கட்டுப்படுத்துவதையோ வர்த்தகமாக்குவதையோ விரும்புவதில்லை. எந்த விதமான பண பரிமாற்றங்களையோ அல்லது போட்டியாளர்களுடன் ஒப்பந்தங்கள் அவற்றை தவிர்த்து விட்டு உள்ளூர் மற்றும் சர்வதேச சட்டத்திற்க்கு உட்பட்டே இஞ்ச்கேப் தன் தொழிலை செய்யும்.

மேலும் இஞ்ச்கேப் மற்றும் அதன் ஊழியர்கள் போட்டியாளர்களின் இரகசியத்தை அடைய முயற்சிக்க மாட்டார்கள் அல்லது அவை எதிர்பாராத விதமாக கிடைத்தால் இஞ்ச்கேப் அவற்றை அழித்து விடும் அல்லது சம்பந்தப்பட்ட நபரிடம் ஒப்படைத்து விடும்.

### இஞ்ச்கேப் உத்தரவாதம் ஆவண மேலாண்மை

வெளிப்படைத்தன்மையை ஒரு பகுதியாக கருதுவதால் வேலை சார்ந்த ஆவணங்களை தக்கப்படி பாதுகாத்து விதிமுறைகளுக்கு உட்பட்டு தணிக்கை மற்றும் சட்ட தேவைகளுக்கு தரும் என்ற உறுதியை இஞ்ச்கேப் அளிக்கிறது.

## இஞ்ச்கேப் கீழ்க்கண்டவை குறித்து உத்தரவாதம் அளிக்கிறது...

# நீடிப்புத்திறன்

இவ்வுலகத்தையும் சமூகத்தையும் பாதுகாக்க வேண்டும் என்பதை இஞ்ச்கேப் நன்றாக உணர்ந்துள்ளது. அதனால் குறைந்த காற்று மாசு, மாசுக் கட்டுப்பாடு, குப்பைகளை குறைப்பது, மறுசுழற்சி அல்லது மறு உபயோகிக்கும் பொருட்கள் இவற்றில் கவனம் செலுத்தி நிலத்திலும் கடல்களிலும் ஏற்படும் மாசை குறைப்பதில் இஞ்ச்கேப் உறுதியாக உள்ளது. இஞ்ச்கேப் தனது எல்லா செயலிலும் பூமிக்கு தீங்கு விளைவிக்கும் மறுசுழற்சி செய்ய முடியாத பொருட்களை குறைந்த அளவில் உபயோகித்து அல்லது வேறு சிறந்த முறைகளை பயன்படுத்தும்.

இஞ்ச்கேப்பின் கொள்முதலின் நிலைத்தன்மை மற்றும் இஞ்ச்கேப்பின் குறிக்கோள் மற்றும் கொள்கைகளும் பிரிட்டிஷ் நிலைத்தன்மையும் BS8903 ஒரே நேர்க்கோட்டில் உள்ளன:

- சில விதிமுறைகளை பயன்படுத்தி சிறிய அளவில் ஆற்றலை உபயோகித்து புதுமையான தீர்வுகளைக் கண்டறிவது.
- குறிப்பிட்ட கொள்முதல் பொருட்கள், சாதனங்களின் சேவையை உபயோகித்து சமூகத்தை சீர் செய்து, பொருளாதாரம் மற்றும் சுற்றுச் சூழலை கருத்தில் கொண்டு சமூகத்தை உயர்த்தும் வகையில் செயல்படுவது.
- ஏற்புடைய மற்றும் சிக்கனமான பொருள்களை உபயோகித்தல்.
- முடிந்த வரை குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு வாய்ப்பு அளித்தல், சமூகம் சார் அமைப்புகளை உபயோகித்தல், உள்ளூர் வேலைவாய்ப்பு, பன்முகத்தன்மை இவற்றை ஆதரித்தல் மற்றும் தன்னார்வலர் நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுதல், குறிப்பாக நமது அலுவலகங்களுக்கு அருகாமையில் இருப்பவற்றுடன்.

தங்கள் சுற்றுசூழல், நீடிப்புத்திறன் மற்றும் சமூகம் சார்ந்த பொறுப்புகளை அடிக்கடி சீராய்வு செய்து மேம்படுத்தும் உத்திரவாதத்தை இஞ்ச்கேப் அளிக்கிறது. இது குறித்து மேலும் தகவல்கள் இஞ்ச்கேப்பின் பொது இணையம் மற்றும் நிறுவன இணைய பக்கங்களில் உள்ளன.



## இஞ்ச்கேப் கீழ்க்கண்டவை குறித்து உத்தரவாதம் அளிக்கிறது...

# தெளிவான கொள்கைகள்

வணிக கோட்பாடு மற்றும் நெறிமுறைக்கு உட்பட்டு உயர்ந்த நோக்கோடு இஞ்ச்கேப்பின் கொள்கைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. மேலும் தகவல்கள் இணக்க கொள்கையில் விவரிக்கப்பட்டுள்ளன. இந்தக் கொள்கைகள் குறிப்பிடத்தக்க விதிகள் மற்றும் செயல்முறைகளோடு செயல்படுவதை இஞ்ச்கேப் நன்றாக கவனித்துக் கொண்டு வருகிறது.

ஒவ்வொரு இணக்கக் கொள்கைகளையும் முழு விவரத்தோடு விதி மற்றும் செயலாக்கத்தை தெளிவான விளக்கங்களுடனும், கூடுதல் தகவலை எப்படி பெறுவது என்பதையும், செய்ய தவறினால் எடுக்கப்படும் ஒழுக்க விளைவுகளையும் விவரிக்கிறது.

இஞ்ச்கேப்பின் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள் தொழில் தர்மத்திற்கு உட்பட்டு இணக்கத்துடன் செயலாற்றப்பட்டு, இணக்க கொள்கைகளுடன் இணைந்து உள்ளன. இஞ்ச்கேப் இணக்க விதிமுறைகள் நிறுவனத்தின் நடத்தைக்கு அடிப்படையாகும். இதற்கு இயக்குனர் குழு மற்றும் இனக்குழு அதிகாரிகளே முழு பொறுப்பாவார்கள்.



### இஞ்ச்கேப்
### அணுகக்கூடியக் கொள்கைகள்

இணக்கக் கொள்கைகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் எளிதாக படித்து புரிந்துக் கொள்ளும்படி இருக்கவேண்டும் என இஞ்ச்கேப் விரும்புகிறது. இணையத்திலிருந்து எந்நேரமும் கொள்கைகளை பதிவிறக்கம் செய்து படிக்கலாம். அல்லது இணக்கக்குழு அதிகாரி அல்லது மின்னஞ்சல் மூலம் கேட்டுப் பெறலாம். அல்லது இணக்கக்குழு அதிகாரிஅல்லது இணக்கமின்னஞ்சல் மூலம்கேட்டுப்பெறலாம்.

மூன்றாம் தரப்பினரும் இணக்க கொள்கையின் நகலை மேற்கூறிய ஏதேனும் ஒரு வழியில் பெற்றுக்கொள்ளலாம். கையேட்டின் பின்பக்கத்தில் தொடர்புக்கொள்ள வேண்டிய அனைத்து தகவல்களும் கொடுக்கப்பட்டுள்ளது.

நிறுவன அகச்சேவையில் பார்வைக்கு வைக்கப்பட்ட கொள்கை பற்றிய தகவல்கள் காலத்திற்கு ஏற்ப எந்நேரமும் மாற்றி அமைக்கப்படலாம். தற்போதுள்ள சேவையை பதிவிறக்கம் செய்யும் பொழுது, நிறுவன உள் இணையத்தில் இருக்கும் கொள்கைகளே செல்லுபடியாகும் என்பதை நினைவில் வையுங்கள்.

### இஞ்ச்கேப்
### கொள்கைகளை விளக்குதல்

இஞ்ச்கேப்பின் நோக்கமானது இணக்கக் கொள்கைகள் யாவும் எளிதில் படித்து புரிந்துக் கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதே. ஒவ்வொரு கொள்கையின் முடிவிலும் ஒரு பிரிவில் தகவல் அறிவது எப்படி, கேள்வி எழுப்புவது எப்படி என்று விளக்கி கூறப்பட்டுள்ளது. கொள்கைகளில் ஏதேனும் தெளிவு இல்லை எனில் ஊழியர்கள் கேட்டுத் தெளிவுப்படுத்திக் கொள்ள வேண்டும் என இஞ்ச்கேப் விரும்புகிறது.

# தகவல் தொடர்பு விளக்கங்கள்

ஊழியர்கள் ஏதேனும் நெறிமுறை தவறியதாக உணர்ந்தால் அதை நிறுவனத்திற்கு தெரிவிக்க விரும்பினால் அல்லது கொள்கைகளைப் பற்றி கேள்வி எழுப்ப விரும்பினால், இணக்கக் கொள்கைகளைப் பற்றி சந்தேகம் இருந்தால் அவர்கள் தொடர்புக்கொள்ள வேண்டியது:

## இணக்கத்துறை

compliance@iss-shipping.com

## ஹாட்லைன்

www.convercent.com

## இணைய முகவரி

http://www.iss-shipping.com/

## இனக்குழு அதிகாரி

Matthew Paice

Matthew.Paice@iss-shipping.com

## இணைய பாதுகாப்பு & இணக்க மேலாளர்

Lee Scott

Lee.Scott@iss-shipping.com

## சட்டத்துறை தலைவர் மற்றும் மனித வள மேம்பாடு அதிகாரி

Niree Mahabeer

Niree.Mahabeer@iss-shipping.com

## இஞ்ச்கேப் ஊழியர்களுக்கு மட்டும்

ஊழியர்களுக்கு அறிக்கை அளிப்பதற்கான கூடுதல் வழிமுறைகள்:

- நேரடி மேலாளர்
- மனித வளத்துறை
- சட்டத்துறை
- இஞ்ச்கேப் உள் இணையம்

INCHCAPE
SHIPPING SERVICES

**www.iss-shipping.com**
compliance@iss-shipping.com

© Inchcape Shipping Services 2018